# ஸ்ரீவில்லிபுத்தூர் நகர்மன்றம்
## அவசரக் கூட்டம்

**2019** ம் ஆண்டு **மார்ச்** மாதம் **7** ம் நாள் புதன் கிழமை பிற்பகல் **4.30** மணியளவில் நடைபெற்ற **அவசரக்** கூட்ட நடவடிக்கைகள்.

**முன்னிலை :- திருமதி. அ. மாணிக்க அரசி, எம்.ஏ.,**
**தனி அதிகாரி.**

பொருள் எண் :102

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட வார்டு எண் 4 பெருமாள்பட்டி மெயின் ரோடு கீழ்பக்கம் உள்ள கழிப்பறையினை பழுது பார்க்கும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.30,000/ க்கும், மேற்படி பணியினை அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று மதிப்பீட்டு விலை விகிதத்தில் நகராட்சி பதிவு பெற்ற ஒப்பந்தகாரர் திரு. அ. சடையப்பன், மூலம் பணியினை செய்து முடிக்கவும் மன்ற அனுமதிக்காக. மேற்கண்ட செலவுத் தொகையை பொது நிதியிலிருந்து மேற்கொள்ள அனுமதிக்கு.

**ந. க. எண் 1288/2019/ E1**

பொருள் எண் :103

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட நகராட்சி பள்ளிகளிலுள்ள சத்துணவு மையங்களுக்கு வர்ணம் பூசும் பணியினை மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண் 85, நாள் 28.02.2019 ல் அனுமதிக்கப்பட்டதன்படி 07.03.2019 ம் தேதி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | திருமதி. வி. சரோஜா என்ற ஜீவா, ஒப்பந்தகாரர் | மதிப்பீட்டை விட 0.42 % குறைவு |
| 2 | திரு. வி. அழகர்ராஜ், ஒப்பந்தகாரர் | மதிப்பீட்டை விட 5.11 % அதிகம் |

மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.42 % குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திருமதி. வி. சரோஜா என்ற ஜீவா, என்ற ஒப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்ள அனுமதிக்கு. அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்க.

**ந. க. எண் 9793/2018/ C2**

பொருள் எண் :104

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிக்குட்பட்ட பெருமாள்பட்டி மேல்பக்கமுள்ள கழிப்பறையில் பழுது பணிகளை மேற்கொள்ள இந்நகர் மன்ற தீர்மான எண் 52, நாள் 28.02.2019 ல் அனுமதிக்கப்பட்டதன்படி 07.03.2019 ம் தேதி வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் விபரம் கீழ்கண்டவாறு.

| வ.எண் | ஒப்பந்தகாரர் பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | திரு. வி. அழகர்ராஜ், ஒப்பந்தகாரர் | மதிப்பீட்டை விட 0.24 % குறைவு |
| 2 | திருமதி. வி. சரோஜா என்ற ஜீவா, ஒப்பந்தகாரர் | மதிப்பீட்டை விட 0.84 % அதிகம் |
| | | |

மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.24 % குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. வி. அழகர்ராஜ், என்ற ஒப்பந்தகாரரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்றுக் கொள்ள அனுமதிக்கு. அவசர அவசியம் கருதி ஆணையர் மற்றும் தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அங்கீகரிக்க.

**ந. க. எண் 0588/2019/ E1**

பொருள் எண் :105

நகராட்சி அலுவலகத்திற்கு தேவையான கணிணி Key Board 12 எண்ணம் மற்றும் Mouse 12 எண்ணம் விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் பின்வரும் மூன்று விலைப்புள்ளிகள் பெறப்பட்டுள்ளது.

| வ.எண் | நிறுவனத்தின் பெயர் | Key board மற்றும் Mouse | | |
|---|---|---|---|---|
| | | அளவு | விலை | தொகை |
| 1 | வின் சிஸ்டம்ஸ், 181/B, காமராஜ் நகர், ராமகிருஷ்ணாபுரம், ஸ்ரீவில்லிபுத்தூர். | 12 எண்ணம் | ரூ.1240/- | 14880 |
| 2 | ஆல்பா சிஸ்டம்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர். | 12 எண்ணம் | ரூ.1245/- | 14940 |
| 3 | அக்ஷயா கம்ப்யூட்டர், ஸ்ரீவில்லிபுத்தூர். | 12 எண்ணம் | ரூ.1250/- | 15000 |

பெறப்பட்ட மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வின் சிஸ்டம்ஸ், ஸ்ரீவில்லிபுத்தூர் நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஒப்புக் கொள்ள அனுமதிக்கு வைக்கப்பட்டுள்ளது.

**அலுவலகக்குறிப்பு :-** குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள வின்சிஸ்டம்ஸ் நிறுவனத்தின் விலைப்புள்ளியை அனுமதிக்கலாம்.

பொருள் எண் :106

தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 ஐ, அரசாணை நிலை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( MA 1 ) நாள் 04.02.2019 ல் உத்திரவு பிறப்பிக்கப்பட்டு அதனை தமிழ்நாடு அரசிதழில், அரசிதழ் எண் 43, நாள் 04.02.2019 ல் வெளியிடப்பட்டுள்ளது. மேற்கண்ட அரசாணை மற்றும் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 ஐ மன்றத்தின் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.
ந.க.எண் 1291/2019/F1

பொருள் எண் :107

ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி எல்கைக்குட்பட்ட பகுதிகளில் கட்டிட அனுமதி கோரி வரப்பெறும் விண்ணப்பதாரர்களிடம் பெறப்படும் கட்டிட உரிமைக் கட்டணமானது 01.04.2016 விருந்து திருத்தப்பட்டு தேதி வரை வசூல் செய்யப்பட்டு வருகிறது. இந்நிலையில் அரசாணை நிலை எண் 18, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை ( MAI ) நாள் 04.02.2019 தமிழ்நாடு அரசிதழ் எண் 43, நாள் 04.02.2019 ஆகியவற்றில் தமிழ்நாடு ஒருங்கிணைக்கப்பட்ட அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 வெளியிடப்பட்டுள்ளது. மேற்படி விதியில் 04.02.2019 முதல் கட்டிட உரிமம் காலத்தினை மூன்று ஆண்டு அனுமதி காலம் என இருந்ததை ஐந்து ஆண்டுகளாக மாற்றியுள்ளதால் 04.02.2019 முல் கட்டண விகிதங்கள் மாற்றம் செய்து நடைமுறைப் படுத்திட அவசியம் எழுந்துள்ளது. எனவே நிலையில் உள்ள கட்டண விகிதத்தில் தேவையான திருத்தங்கள் செய்து திருத்திய கட்டணம் மற்றும் உரிம கால விவரங்கள் குறிப்பிட்டு கீழ்கண்டவாறு திருத்தியமைக்க மன்ற அனுமதிக்கும் அங்கீகாரத்திற்கும் வைக்கப்படுகிறது.

திருத்தப்பட்ட கட்டிட உரியையாணைக் கட்டண பட்டியல்
அட்டவணை

| வ. எண் | தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் 1920 பிரிவுகள் | அனுமதிக்கப்பட்ட இனங்களில் தற்போது வசூலிக்கப்படும் கட்டிட உரிமங்களின் விபரம் | தற்போது நகராட்சியால் வசூலிக்கபப்படும் கட்டிட உரிமங்களின் கட்டண விபரம் | | | திருத்தி அமைக்கப்பட்டுள்ள கட்டிட உரிமங்களின் கட்டண விபரம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | அளவு | காலம் | தொகை ரூபாய் | அளவு | காலம் | தொகை ரூபாய் |
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 1 | 197 | கட்டிட விண்ணப்பம் கூர்ந்தாய்வு கட்டணம் | --- | விண்ணப்பம் ஒன்றுக்கு | 100 | --- | விண்ணப்பம் ஒன்றுக்கு | 500 |
| 2 | 197 (1) a | காரை மட்டப்பா, RCC, ஓடு AC தகரம் மரம் போன்ற பொருட்களால் கட்டிடம் கட்டுவதற்கு மனை அங்கீகாரம் (Site Approval ) வழங்க | | | | | | |
| | | அ) குடியிருப்பு மனை | மனை ஒன்றுக்கு | ஒரு முறை | 150 | மனை ஒன்றுக்கு | ஒரு முறை | 250 |
| | | ஆ)குடியிருப்பு அல்லாத மனை | மனை ஒன்றுக்கு | ஒரு முறை | 200 | மனை ஒன்றுக்கு | ஒரு முறை | 250 |
| 3 | 197 மற்றும் 215 | **குடியிருப்புக் கட்டிடம்** 1)ஆர்.சி.சி. கூரை மெட்ராஸ் கூரை தளம், சிமெண்ட் கூரை கட்டிடம் கட்ட தரைத்தளம் மற்றும் தரை கீழ் தளம் | 10. ச.மீ அதன் பாகம் | மூன்று ஆண்டு | 175 | 10. ச.மீ அதன் பாகம் | ஐந்து ஆண்டு | 225 |
| | | 2) முதல்தளம் | ,, | ,, | 225 | ,, | ,, | 275 |
| | | 3) இரண்டாவது தளம் அதற்கு மேலும் | ,, | ,, | 250 | ,, | ,, | 300 |
| | | குடியிருப்பு அல்லாத வியாபரம் மற்றும் தொழிற்சாலை கட்டிடம் 1) தரைத்தளம் மற்றும் தரை கீழ்தளம் | 10. ச.மீ அதன் பாகம் | மூன்று ஆண்டு | 200 | 10. ச.மீ அதன் பாகம் | ஐந்து ஆண்டு | 250 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | 2) முதல்தளம் | ,, | ,, | 250 | ,, | ,, | 300 |
| 7 | | 3) இரண்டாவது தளம் அதற்கு மேலும் | ,, | ,, | 300 | ,, | ,, | 350 |
| | | எல்லைச் சுவர் கட்ட அனுமதிக்க ( 1.50 மீட்டர் உயரத்திற்குள்) | 10. மீட்டர் மற்றும் பகுதி | ,, | 200 | 10. மீட்டர் மற்றும் பகுதி | ,, | 250 |
| 4 | 199 முதல் 201 | கிணறு, குளம், ஊற்று போன்றவைகள் தோண்டுதல் | ஒன்றுக்கு | ,, | 500 | ஒன்றுக்கு | ,, | 600 |
| | | நாடகம், சினிமா, சர்க்கஸ் போன்ற காட்சிகள் நடத்துவதற்கு கொட்டகை அமைக்க<br>1)RCC தகரம், AC ஷீட், காரை மட்டப்பா ஆகிய நிரந்தரமான கட்டிடங்கள்.<br>2) AC ஷீட் தகரம் மற்றும் தீப்பிடிக்காத கூரை (Life Roof )ஆகியவை தற்காலிக கொட்டகை. | 10. சதுர மீட்டர் மற்றும் அதன் பாகத் திற்கு | ,, | 1000 | 10. சதுர மீட்டர் மற்றும் அதன் பாகத் திற்கு | ,, | 1200 |
| | | அ)மேற்கூரையுடன் கூடியது | ,, | மாதம் ஒன்றுக்கு | 25 | ,, | மாதம் ஒன்றுக்கு | 50 |
| | | ஆ)திறந்த வெளியுடன்கூடிற சுற்றுப்புற கொட்டகை | ,, | ,, | 15 | ,, | ,, | 50 |
| | | 3) குளியல் அறை | ஒன்றுக்கு | மூன்று ஆண்டு | 200 | ஒன்றுக்கு | ஐந்து ஆண்டு | 250 |
| | | 4) மல அறை | ,, | ,, | 200 | ,, | ,, | 250 |
| | | 5) குளியல் மல அறை சேர்த்து | ,, | ,, | 300 | ,, | ,, | 350 |
| | | 6) நச்சு தொட்டி (செப்டிக் டேங்க்) | ,, | ,, | 200 | ,, | ,, | 250 |
| | | 7) மாடிப்படி அமைக்க | ,, | ,, | 200 | ,, | ,, | 250 |
| 5 | 186 | 1)முன் அனுமதி பெறாமல் துவங்கப்படும் கட்டிடங்கள் | கட்டிட அனுமதி கட்டணத்தில் 50% தாமதம் கட்டணம் | | | கட்டிட அனுமதி கட்டணத்தில் 50% தாமதம் கட்டணம் | | |
| | 204 | 2)அனுமதிக்கப்பட்ட அனுமதியின் காலத்தை புதுப்பிக்க | கட்டிட உரிமைத்தைப் புதுப்பிக்க அனுமதிக்கப்பட்ட காலத்திற்குள் புதுப்பித்தல் அமைப்பு ஒப்புதல் கட்டணம் தவிர (Site Approval fees) இதர தொகையினை செலுத்தப்பட வேண்டும். காலம் கடந்து வந்தால் உரிமையாணைத் தொகையில் 50% சேர்த்துக் கட்ட வேண்டும். | | | கட்டிட உரிமத்தைப் புதுப்பிக்க அனுமதிக்கப்பட்ட காலத்திற்குள் புதுப்பித்தல் அமைப்பு ஒப்புதல் கட்டணம் தவிர ( Site Apporval fees) இதர தொகையினை செலுத்தப்பட வேண்டும். காலம் கடந்து வந்தால் உரிமையாணைத் தொகையில் 50% சேர்த்து கட்ட வேண்டும். | | |
| 6 | 175 முதல் 177 | கட்டிட காரியங்களுக்கு நிலத்தை வீட்டு மனைகளாகவும் தெருக்களாகவும் (லே-அடிட்) அனுமதி கோரல் | ஒரு ஏக்கர் அதன் பாகத் திற்கு | ஒரு முறை | 1000 | ஒரு ஏக்கர் அதன் பாகத் திற்கு | ஒரு முறை | 2000 |
| 7 | 186 | **<u>இதர வகைகள்</u>**<br>**1)**கட்டிடங்கள் வேலை செய்வதற்கு தெரு ஓரங்களில் | ஒரு சதுர மீட்டர் | ஆறு மாதம் | 50 | ஒரு சதுர மீட்டர் | ஆறு மாதம் | 100 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | குழிதோண்டி சாரம் கட்டுவதை அனுமதிக்க | | | | | | |
| | | **2)**அனுமதிக்கப்பட்ட வரைபடங்களுக்கு அத்தாட்சி நகல் வழங்க | ஒரு நகல் | ஒரு முறை | 50 | ஒரு நகல் | ஒரு முறை | 100 |
| | | **3)** கட்டிட உரிமத்தின் உத்திரவு நகல் வழங்க | ,, | ,, | 50 | ,, | ,, | 100 |
| | | **4)** நான்கு மால் அளக்க ( ஒரு வளைவுக்கு) | ஒரு வளைவு | ஒரு தடவை | 40 | ஒரு வளைவு | ஒரு தடவை | 75 |
| | | **5)** நகர வரைபட நகல் (Town Map )<br>a) பெரியது வழங்க<br>b) சிறியது வழங்க | | ஒன்று<br>ஒன்று | 200<br>100 | ஒன்று<br>ஒன்று | | 400<br>200 |
| | | **6)**நகராட்சியிலிருந்து இதர சான்றுகள் வழங்க | | ஒன்று | 100 | ஒன்று | | 200 |
| | | **7)** டவுண் சர்வே வரைபட நகல் | சர்வே எண்ணுக்கு | | 150 | சர்வே எண்ணுக்கு | | 250 |
| | | **8)** சர்வே நிலபதிவேட்டின் நகல் | சர்வே எண்ணுக்கு | | 150 | சர்வே எண்ணுக்கு | | 250 |
| | | 9) நகரளவை மனை உட்பிரிவு கட்டணங்கள் | சர்வே எண்ணுக்கு | | 200 | சர்வே எண்ணுக்கு | | 300 |
| | | 10) தெரு, ரோடு ஓரங்களில் கட்டிடம் கட்டுவதற்கு தேவையான கல், மணல் போன்ற கட்டிட பொருள்களையும், கட்டிட இடிபாடு கழிவுப் பொருள்களையும் பொது மக்களுக்கும், போக்குவரத்திற்கும், இடையூறு இல்லாமல் சேமித்து வைப்பதற்கு அனுமதி அளித்தல் | | | | | | |
| | | அ) புதிய கட்டிடங்களுக்கு | | ஒருமுறை | உரிமைய ாணைக் கட்டணத் தில் 25% | | ஒருமுறை | உரிமைய ாணைக் கட்டணத் தில் 50% |
| | | ஆ)பழைய கட்டிடங்களை இடித்து மாறுதல் செய்வதற்கு | | ஒருமுறை | உரிமைய ாணைக் கட்டணத் தில் 50% | | ஒருமுறை | உரிமைய ாணைக் கட்டணத் தில் 50% |
| | | 11) கட்டிடவரைபட வரைவாளர் வைப்புத் தொகை | ஒரு வருடம் | ஒரு முறை | 1000 | ஒரு வருடம் | ஒரு முறை | 3000 |
| | | 12) கட்டிட வரைபட வரைவாளர் உரிமையாணைக் கட்டணம் | ஒரு வருடம் | ஒரு முறை | 500 | ஒரு வருடம் | ஒரு முறை | 2000 |
| | | 13)கட்டிட வரைபட வரைவாளர் உரிமம் புதுப்பிக்க | ஒரு வருடம் | ஒரு முறை | 200 | ஒரு வருடம் | ஒரு முறை | 1000 |
| | | 14)நகராட்சி எல்லைக்குள் நிறுவப்படும் கைபேசி (Cell Phone) கோபுரங்கள் | ஒரு எண்ணம் | மூன்று ஆண்டுகள் | 5000 | ஒரு எண்ணம் | ஐந்து ஆண்டுகள் | 7000 |

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | அமைத்துக் கொள்ள | | | | | | |
| | | 15)கோடை கால பந்தல்கள் (போக்குவரத்திற்கு இடைஞ்சல் இல்லாமல் கால்கள் இல்லாமல்) | | இலவசம் முன் அனுமதி பெற வேண்டும் | மூன்று மாதம் ( ஏப்ரல் முதல் ஜீன் வரை) | | இலவசம் முன் அனுமதி பெற வேண்டும் | மூன்று மாதம் மட்டும் (ஏப்ரல் முதல் ஜீன் வரை) |
| | | 16)மத சம்பந்தமான திரவிழா காலங்களில் கோவில் முன்பு பந்தல் போடுவதற்கும் தேர்தல் காலங்களில் பொது இடங்களில் பந்தல் போடுவதற்கும். | | | இலவசம் | | | இலவசம் |
| | | 17) திரமணம் மற்றும் விசேஷங்களுக்கு பந்தல் (போக்குவரத்திற்கு இடையூறு இல்லாமல்) | | | இலவசம் | | | இலவசம் |

**பொருள் எண் :108**

*தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 ன் படி நகராட்சிப் பகுதிகளில் கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்குவது தொடர்பாக விதி எண் 30(1) ல் குறிப்பிட்டுள்ளபடி தொடர் கட்டுமான பகுதியாக ( Continuous Building Area ) அறிவிப்பு செய்வதற்கு நகர்மன்றத்தின்ஒப்புதலுடன் நகர் ஊரமைப்பு இயக்குநர் மற்றும் அரசுக்கு பிரேரணைகள் அங்கீகாரத்திற்கு அனுப்பப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிப் பகுதியில் உள்ள தொடர் கட்டுமான பகுதியாக கீழ்க்காணும் நகரளவை எண்கள் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.*

***அலுவலகக்குறிப்பு :-*** *மன்றம் அனுமதிக்கலாம்.*

**பொருள் எண் :109**

*தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 ன் படி நகராட்சிப் பகுதிகளில் கட்டிட அனுமதி மற்றும் திட்ட அனுமதி வழங்குவது தொடர்பாக விதி எண் 30 (2) ல் குறிப்பிட்டுள்ளபடி நகராட்சிப் பகுதிகளில் உள்ள பொருளாதார நலிவடைந்தோர் பகுதியினை (Economic Weaker Section ) நகர் மன்றத்தின் ஒப்புதல் பெற்று பிரசுரம் செய்ய தெரிவிக்கப்பட்டுள்ளது. நகராட்சிப் பகுதியில் உள்ள ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள விரிவு அபிவிருத்தி திட்டங்களில் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சிப் பகுதியில் உள்ள கீழ்கண்ட நகரளவை எண்கள் பொருளாதாரத்தில் நலிவடைந்த பகுதியாக அறிவிக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.*

***அலுவலகக்குறிப்பு :-*** *மன்றம் அனுமதிக்கலாம்.*

**பொருள் எண் :110**

*நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 07.03.2019 ம் தேதிய ந.க.எண் 50977/2018/TP3, சுற்றறிக்கையில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டிட விதிகள் 2019 விதி எண் 23 ல் தெரிவிக்கப்பட்டுள்ளபடி இந்நகராட்சி எல்லைக்கு உட்பட்ட பகுதிகளுக்குள் கட்டிட விண்ணப்பங்கள் தயார் செய்யும் பணிக்கு தொழில் சார்ந்த வல்லுநர்கள் நியமனம் செய்ய நடைமுறைகளில் பரிசோதனைக்குபவில் ( Screening Committee ) நகராட்சி ஆணையாளர் (1) நகரமைப்பு அலுவலர் / பொறியாளர் (2) நகரமைப்பு ஆய்வாளர் (3) ஆகிய மூன்று உறுப்பினர்கள் கொண்ட குழு ஒன்று அமைத்திட உத்திரவிடப்பட்டுள்ளதன் அடிப்படையில் மேற்கண்ட 3 உறுப்பினர்கள் கொண்ட பரிசோதனைக்குழு அமைத்திடவும் மற்றும் சுற்றறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ள 1 முதல் 7 வரையிலான நிபந்தனைகளுக்குட்பட்டும் பரிசோதனைக்குழு நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.*

***அலுவலகக்குறிப்பு :-*** *மன்றம் பார்வையிட்டு பதிவு செய்யலாம்.*
*ந.க.எண் 1958/2019/F1*

<u>பொருள் எண் :111</u>

திருவில்லிபுத்தூர் நகராட்சியின் 2018-19 ம் ஆண்டிற்கான திருத்திய வரவு-செலவு மதிப்பீடும் 2019-20ம் ஆண்டிற்கான வரவு செலவு உத்தேச மதிப்பீடும் தயார் செய்து மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு :-** 2018-19 ம் ஆண்டிற்கான திருத்திய வரவு செலவு மதிப்பீட்டிற்கும் 2019-20 ம் ஆண்டிற்கான உத்தேச வரவு செலவு திட்ட மதிப்பீட்டிற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.

<u>பொருள் எண் :112</u>

நகராட்சி நிர்வாக ஆணையாளர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ROC No. 44555/2013/P3, நாள் 28.02.2019 ன் படியும், தமிழ்நாடு மாவட்ட நகராட்சி சட்டம் 1920 பிரிவு 306 ( 28A) ன் படியும், (No.12 of 2019- The Tamil Nadu Municipal Laws ( Second Amendment )Act 2019 Published in Tamil Nadu Government Gazette Extraordinary No 75 dt 21.02.2019) மற்றும் தமிழ்நாடு அரசின் சுற்றுப்புற சுழல் மற்றும் வனத்துறை அரசாணை எண் 84 நாள் 25.06.2018 ன் படியும் தமிழக நகராட்சி பகுதிகளில் ஒரு தடவை மட்டும் பயன்படுத்தப்பட்டு மற்றும் தூக்கி வீசப்பட கூடிய நெகிழியை தயாரித்தல், சேகரித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை தடை செய்ததன் அடிப்படையில் துணை விதிகள் ஏற்படுத்தியோ அல்லது ஏற்கனவே இயற்றப்பட்ட துணை விதிகளில் திருத்தங்கள் மேற்கொண்டோ அரசிதழில் வெளியிட தெரிவித்துள்ளதன் அடிப்படையில் ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பகுதியில் ஒரு தடவை மட்டும் பயன்படுத்தப்பட்டு மற்றும் தூக்கி வீசப்பட கூடிய நெகிழியை தயாரித்தல், சேகரித்தல், வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல், பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவற்றை தடை செய்தும் ஏற்கனவே இயற்றப்பட்ட ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகள் 2016 ( விருதுநகர் மாவட்ட அரசிதழ் எண் 25 நாள் 31.10.2018) ல் கீழ்க்கண்ட திருத்தங்கள் செய்யவும், அரசிதழில் வெளியிடவும் அதற்கான செலவினத்திற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

2016 ஆம் ஆண்டு ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிக்கான திருத்தங்கள்.

| | | |
|---|---|---|
| **பிரிவு 3க்கான திருத்தங்கள்** | | 2016 ம் ஆண்டு ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 3 ஆம் பிரிவில் 22 ஆம் எண்ணிற்கு பின்பு பின்வரும் சொற்களின் பொருள்கள் சேர்க்கப்படுகின்றது. |
| | 23 | **செயலாக்க அதிகாரி :** நகராட்சிப் பகுதிகளில் செயலாட்சி அதிகாரி எனப்படுபவர் நகராட்சி ஆணையாளர் ஆவர். |
| | 24 | **ஆய்வு நடத்தும் அதிகாரி :** ஆய்வு நடத்தும் அதிகாரி எனப்படுபவர்கள் நகராட்சிப் பகுதிகளில் சுகாதார ஆய்வாளர், சுகாதார அலுவலர் மற்றும் ஆணையரால் அதிகாரமளிக்கப்பட்ட பிற பணியாளர்களாவர். |
| | 25 | **மேல் முறையீட்டு அலுவலர்:** இந்த உபவிதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள பொருளடக்கம் தொடர்பான கருத்துக்களில் மேல் முறையீட்டு அலுவலர் ஆணையரே ஆவார். |
| | 26 | **தண்டனைகள் விதிக்கும் முறைகள் :** இந்த உப விதிகளில் தெரிவிக்கப்பட்டுள்ள விதிகளை மீறுபவர்களுக்கு முதல் முறை இரண்டாம் முறை மற்றும் மூன்றாம் முறையான குற்றத்திற்கு அட்டவணை 2 ல் கண்டுள்ளவாறு நிர்ணயம் செய்யப்பட்டுள்ள அபராதத்தை குற்றம் நடைபெறுகின்ற இடத்திலேயே (Spot fine ) வசூலிக்கப்படுவதுடன் தடை செய்யப்பட்ட நெகிழிகள் பறிமுதல் செய்யப்படும். நான்காவது முறையாக மீறுபவர்க்கு உடனடியாக தொழில் உரிமம் இரத்து செய்யப்படும். |
| | 27 | **வர்த்தக நிறுவனங்களின் வகைப்பாடு:** |
| | I | மொத்தமாக ( Whole sale )<br>சேமித்தல் / வழங்குதல் / கொண்டு செல்லுதல் / விற்பனை செய்தல் / பகிர்ந்தளித்தல். |
| | II | வணிக அரங்குகள், துணிக்கடைகள், பல்பொருள் அங்காடிகள், திரை அரங்குகள், திருமண மண்டபங்கள், மதுபான கூடங்கள், தொழிற்சாலைகள், பள்ளி கல்லூரி நிறுவனங்கள் மற்றும் பெரிய வணிக நிறுவனங்கள். |
| | III | மளிகை கடைகள், மருந்து கடைகள், பழக்கடைகள், காய்கறி கடைகள், இறைச்சி மற்றும் மீன் கடைகள் முதலானவைகள். |
| | IV | சிறிய வணிக விற்பனையாளர்கள், தெருவோரக் கடைகள் மற்றும் இதர வணிக நிறுவனங்கள். |
| | | |
| **பிரிவு 4க்கான திருத்தங்கள்** | | 2016 ம் ஆண்டு ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 4 ஆம் பிரிவில் (2) ஆம் கூறுக்கு பின்பு பின்வரும் கூறு சேர்க்கப்படும். |

| | | |
|---|---|---|
| | 2(1) | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேகரித்தல் வழங்குதல், கொண்டு செல்லுதல், விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல் ஆகியவை தடை செய்யப்படுகின்றன. மீறினால் பொருள்களை பறிமுதல் செய்வதுடன் அபராத அட்டவணையில் குறிப்பிட்டவாறு தண்டம் செலுத்த வேண்டி வரும். |
| | | |
| **பிரிவு 6க்கான திருத்தங்கள்** | | 2016 ம் ஆண்டு ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 6 ஆம் பிரிவில் |
| | 2 | நீக்கம் செய்யப்படுகிறது |
| | 3 | நீக்கம் செய்யப்படுகிறது |
| | 4 | நீக்கம் செய்யப்படுகிறது |
| | | |
| **பிரிவு 7க்கான திருத்தங்கள்** | | 2016 ம் ஆண்டு ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் 7 ஆம் பிரிவில் |
| | (a) | நீக்கம் செய்யப்படுகிறது |
| **பிரிவு 8க்கான திருத்தங்கள்** | 8.1 | இந்த திருத்தப்பட்ட துணை விதிகள் தொடங்கிய நாளும் அதற்கு பின்பும் பழக்கப்படும் / எச்சரிக்கை காலம் 30 நாட்கள் ஆகும். அதற்கு பிறகு இந்த துணை விதிகளை மீறுதல் இருந்தால் அபராத அட்டவணை I, II ன் படி இந்த துணை விதி மீறும் நிகழ்வு ஒவ்வொன்றுக்கும் அபராத தொகையுடன் தண்டிக்கப்படுவர். |
| | 8.2 | அட்டவணை I,II ல் குறிப்பிட்டபடி அபராத தொகை கட்டஇயலவில்லை அல்லது மறுத்தாலோ எனில் அவருக்கு எதிராக கடையை / நிறுவனத்தை அல்லது குடோனைப் பூட்டி முத்திரை இடுவதுடன் நகர காவல் சட்டம் / இந்திய குற்றவியல் நடைமுறை சட்டம் / மாவட்ட நகராட்சிகள் சட்டம் 1920 / பொது சுகாதார சட்டம் 1939 ன் படி வழக்கு மற்றும் மேல் நடவடிக்கை எடுக்கப்படும். |

2016 ஆம் ஆண்டு ஸ்ரீவில்லிபுத்தூர் நகராட்சி பிளாஸ்டிக் கழிவு மேலாண்மை துணை விதிகளில் அபராத அட்டவணை I க்கு பின்பு அட்டவணை II சேர்க்கப்படுகிறது.

**அட்டவணை II**

| **வ. எண்** | **குற்றங்கள்** | **முதன் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம்** | **இரண்டாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம்** | **மூன்றாம் முறையான குற்றத்திற்கான பணத்தண்டம்** |
|---|---|---|---|---|
| I | பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை சேமித்தல் வழங்குதல் கொண்டு செல்லுதல் விற்பனை செய்தல் மற்றும் பகிர்ந்தளித்தல். | ரூ.25,000/- | ரூ.50,000/- | ரூ.1,00,000/- |
| II | வணிக வளாகங்கள் துணிக்கடைகள் மற்றும் பல்பொருள் அங்காடிகள் போன்ற மிகப்பெரிய வணிக நிறுவனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | ரூ.10,000/- | ரூ.15,000/- | ரூ.25,000/- |
| III | மளிகைக் கடைகள் மற்றும் மருந்துக் கடைகள் போன்ற நடுத்தர வணிக நிறுனங்களில் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | ரூ.1000/- | ரூ.2000/- | ரூ.5000/- |
| IV | சிறிய வணிக விற்பனையாளர்கள் பயன்படுத்தப்பட்ட மற்றும் தூக்கி வீசப்பட்ட நெகிழியை பயன்படுத்துதல் மற்றும் பகிர்ந்தளித்தல். | ரூ.100/- | ரூ.200/- | ரூ.500/- |

**அலுவலகக்குறிப்பு :-**

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) அரசிதழில் வெளியிடுவதற்கான செலவினத்திற்கும் மன்றம் அனுமதிக்கலாம்.